Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம்10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (10-9-65) இதழ் 210

விசுவாவசு ஆவணி 25 ஜ: அவ் பிறை 13 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



துரை அன் கோ

23/5 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## உலகத் தலைவர்கள் அபிப்பிராயம்

லண்டன், செப். 9

ஐ. நா. வின் சமரச ஏற்பாட்டின்படி இந்தியாவும் பாகிஸ்தானும் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை நிறுத்த வேண்டும் என பல நாட்டுத் தலைவர்களும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை, அல்ஜீரியா, டுனீஷியா, கனடா, ஈரான், ஜோர்டன் ஆகிய நாடுகளும் இது போன்றே அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

# லாகூருக்கு அருகில் கடும்சண்டை

## டாங்கிகளை ஏற்றிச்சென்ற பாகிஸ்தான் ரயில் நாசம்

புதுடில்லி, செப். 9

**மேற்குப் பாகிஸ்தானில் லாகூருக்குச் சமீபத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தியத் துருப்புக்களுக்கும் பாகிஸ்தான் துருப்புக்களுக்குமிடையில் கடும் சண்டை நடைபெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன. மும்முனையிலும் இந்தியத் துருப்புக்கள் முன்னேறிச் செல்வதாகவும் ஊரி - பூஞ்ச் பகுதியில் இதுவரை 20 பாகிஸ்தானிய நிலைகளை இந்தியத் துருப்புக்கள் கைப்பற்றியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.**

இந்தியா கடைசியாக ஏற்படுத்திய ஜம்மு முனையில் மேற்கு பாகிஸ்தானை நோக்கி இந்தியத் துருப்புக்கள் முன்னேறி வருவதாக கடைசிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்று இங்கு நடைபெற்ற சண்டையில் 3 பாகிஸ்தானிய தாங்கிகள் அழிக்கப்பட்டன. பலர் சிறைபிடிக்கப்பட்டனர்.

லாகூர் முனையில் இன்று கடும் சண்டை நடைபெறுகிறது. கடந்த 24 மணி நேரத்தில் 17 பாகிஸ்தானிய டாங்கிகள் அழிக்கப்பட்டதுடன், ஆயுதங்கள், வெடிவருந்து வகைளும் கைப்பற்றப்பட்டன. 23 தாங்கிகளை ஏற்றிச் சென்ற புகையிரதத்தின் மீது இந்தியத்துருப்புக்கள் தாக்கியதில் ரயில் நாசமாயிற்று.

இங்கு ஒரு விமானத்தை பாகிஸ்தான் சுட்டு சேதப்படுத்தியது.

ஊரிபூஞ்ச் பகுதியில் ஹாஜிபீர் கணவாய் உட்பட இதுவரை 20 பாகிஸ்தானிய நிலைகள் கைப்பற்றப்பட்டன. இன்று நடைபெற்ற சண்டையில் வடகிழக்கே 8 மைல் தொலைவில் உள்ள ஒரு முக்கிய பாகிஸ்தானிய காவல் நிலையை இந்திய துருப்புக்கள் கைப்பற்றின.

ஜோட்பூர், பட்டாகாங் ஆகிய இடங்களில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. ஜோடபூரில் இராணுவத்திற்கு சேதம் எதுவும் இல்லை. பட்டாகாங்கில் சேதம் ஏற்பட்டுள்ளது.

## ஐ. நா. செல்லும் பாப்பரசர்

வத்திக்கான், செப். 9

பாப் போல் அடுத்த மாதம் 4-ம் திகதி ஐக்கிய நாடுகள் சபைக்கு பயணமாவார். அமைதியை நிலைநாட்டுமாறு கோரும்பொருட்டு அவர் அங்குசெல்கிறார்.

ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டின் அழைப்பின் பெயரிலேயே பாப்போல் ஐ. நா. வுக்கு விஜயம்செல்கிறார்.

இந்திய-பாகிஸ்தான் சண்டையை நிறுத்த தன் அதிகாரத்துக்குட்பட்ட சகல நடவடிக்கைகளையும் தான் மேற் கொள்ளப்போவதாக நேற்று அவர் தெரிவித்தார். அடுத்தமாதம் 3-ந் திகதி இரவு ஜனதிபதி ஜோன்சனும் ஐ. நாவில் பிரசன்னமாயிருப்பார். இதற்கான அழைப்பை அவர் ஏற்றுள்ளார் எனவும் ஆனல் போப்பை சந்திப்பதுபற்றி எதுவும் தெரியாது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் பட்டினம் இந்தியத் துருப்புக்கள்வசம்

லண்டன் செப், 8

இந்திய படைகளின்துரித முன்னேற்றத்தைத் தொடர்ந்து பாகிஸ்தான் எல்லையிலிருந்து ஐந்துமைல் உள்ளேயிருக்கும் கார்கிரா பட்டணம் இந்திய படைகளிடம் வீழ்ச்சி அடைந்திருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் அறிவித்தன.

### மும்முனைத் தாக்குதல்

இந்தியத் துருப்புகள் ஒரு முனையில் ராஜஸ்தான் எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். மற்றுமொரு முனையில் இந்தியபடைகள் பஞ்சாப் வழியாக மேற்குப் பாகிஸ்தானுக்குள் நுழைந்திருக்கின்றனர். கடைசியாக கிடைத்த செய்திகளின்படி இந்தியத் துருப்புகள் இப்பொழுது தங்களது மூன்ருவது முனையான ஜம்மு — மேற்குப் பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2 நாட்களில் 21 பாக். விமானம் நாசம்

இந்தியபாதுகாப்புஅமைச்சின் அறிக்கையின்படி; கடந்த இரண்டு நாட்களில் இருபத்தியொரு பாகிஸ்தான் விமானங்கள் அழிக்கப்பட்டனவென்றும் இரண்டுவிமானங்கள் சேதப்படுத்தப்பட்டனவென்றும் இந்திய தரப்பில் மிகச் சொற்ப விமானங்களே சேதம் என்றும்தெரியவருகிறது

### 60 இந்திய விமானங்கள் நாசமாம்

இதற்கிடையில் பாகிஸ்தான் அரசாங்கத்தின் அறிக்கையின்படி; இந்திய விமானப்படையிலுள்ள விமானங்களில் ஐந்திலொரு பகுதி விமானங்களை பாகிஸ்தான் விமானங்களும் பீரங்கிகளும் அழித்துவிட்டன என்றும் அநேகமாக 60 இந்திய விமானங்கள் இதுவரை நாசமாக்கப்பட்டதென்றும் அறியப்படுகிறது.

### துறைமுகம் நாசமாக்கப்பட்டது

இன்று காலை இந்தியாவின் மேற்குப்பகுதியிலிருக்கும் குஜராத் என்னுமிடத்திலுள்ள துவாரகா துறைமுகத்தின்மீது பாகிஸ்தான் கடற்படையினர் குண்டுகளால்தாக்கினர். இத்தாக்குதலின்போது இராணுவசாதனங்கள் அழிக்கப்படவில்லையென்றும் ஆனல் பொது

(6-ம் பக்கம் பார்க்க.

## சீன எச்சரிக்கையும் அமெரிக்க ஆலோசனையும்

லண்டன், செப். 9

சிக்கிம் எல்லையில் இந்தியத் துருப்புகள் சீன எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்திருப்பதாயும் அந்த எல்லையில் இந்தியா படைகளை குவித்திருப்பதாயும் கூறி சீன இந்தியாவை எச்சரித்துள்ளது.

சிக்கிம் எல்லையில் சட்ட விரோதமாக இந்தியா ஆக்கிரமிப்பு நடத்தி படைகளை குவித்திருப்பதாயும், இவற்றை உடனடியாக வாபஸ் பெற்று ஆக்கிரமிப்பை நிறுத்தவேண்டும் என்றும் இந்தியாவுக்கு அனுப்பியுள்ள குறிப்பில் சீன ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இவ்விதம் படைகளை வாபஸ்பெருவிட்டால் அதனுல்ஏற்படும் விளைவுகளுக்கு இந்தியாவே பொறுப்பாகும் எனவும் சீன எச்சரித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு டீன்றஸ்க், இந்தியாவுக்கு சீன விடுத்துள்ள எச்சரிக்கை சம்பந்தமாக "உன்னிப்பாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஆயுத உதவி செய்வதில்லை என்றமுடிவை திரு. டீன் றஸ்க் இன்று அமெரிக்க நிர்வாக காங்கிரஸ் கூட்டத்தில் தெரிவித்தார். எனினும் இரண்டு நாடுகளுக்குமான பொருளாதார உதவி தொடர்ந்து அளிக்கப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் உணவு பொருள்களுக்கு ரேஷன்

புதுடில்லி, செப். 9

இந்திய - பாகிஸ்தான் சண்டையைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியையொட்டி இந்தியாவில் உணவுப்பொருள்களுக்குகூப்பன் முறை அமுல் நடத்தப்படவிருக்கிறது. இந்த முடிவைஇந்திய உணவு மந்திரி இன்று ராஜ்யசபையில் வெளியிட்டார்.

ராஜ்யங்கள் யாவும் இந்த முறையை உடனடியாகக் கைக்கொள்ளவேண்டும் எனவும் உணவுமந்திரி திரு. சுப்பிரமணியம் கேட்டுள்ளார். 1 லட்சம் பேரும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழும்ஒவ்வொரு இடங்களிலும் கூப்பன்முறை அமுல் செய்யப்படும்.

இன்றைய கஷ்ட நிலையில் கொள்வனவை அதிகரிக்க வேண்டும் என்றும் ஆனல் இறக்குமதி செய்வதில் கஷ்டம் ஏற்படலாம் எனவும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்தக் கஷ்ட நிலையில் கிடைக்கும் உணவை எல்லோரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்என்றும், நாட்டுக்காகமக்கள்தியாகம்செய்யத் தயாராயிருக்கவேண்டும் எனவும், ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் நடக்கவேண்டும் எனவும் உணவு மந்திரி வேண்டிக்கொண்டார்.

நிரந்தரக்காரியதரிசி

## யாழ்ப்பாணம் வருகிருர்

குரும்பசிட்டி, வியா.

உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஏ.ஈ.ஜி. மொறகொட வருகிற சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கிருர். யாழ். மாவட்டத்தில் உள்ள ஸ்தலஸ்தாபன சபைகளில் நிலவும் நிர்வாக சீர்கேடுகள் பற்றி வரியிறுப்பாளர்கள் பலரிடமிருந்தும் கிடைத்த முறையீடுகளை நேரில் விசாரணைகள் நடத்துவது இவரது விஜயத்தின்நோக்கமாகும். ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தின் உத்தரவின் பேரில் இங்கு வரும் நிரந்தரக்காரியதரிசி முக்கியமாக பருத்தித்துறை பட்டினசபை மீது கவனம் செலுத்துவார்.

## அரிசி மூடைகள் ஆழ்கடலில் வீசப்பட்டன

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவுப் பகுதிக்கு கூப்பனுக்கு விநியோகிக்கப்படும் அரிசி மூடைகள் பல மண்எண்ணெய் ஊற்றப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டதால், அம்மூடைகள் பாவிப்பதற்கு ஏற்றதல்ல என்று கருதப்பட்டு ஆழ்கடலில் வீசப்பட்டன.

ஊர்காவற்றுறையிலிருந்து கொண்டுவரப்பட்ட அரிசிமுடைகள்மீது மண்எண்ணெய் தாங்கிகளை ஏற்றியதன் காரணமாகவே மேற்படி சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்விஷயம் குறித்து நெடுந்தீவுப்பகுதி உணவுக்கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரி, நெடுந்தீவுகாரியாதிகாரிக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இவ்வரிசி மூடைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நெடுந்தீவுக் காரியாதிகாரியும் இது சம்பந்தப்பட்ட மேலதிகாரியும் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் விளைவாகக் கொண்டுவரப்பட்ட அரிசிமூடைகளில் பதின்மூன்று அரிசிமூடை பாவிப்புக்கு ஏற்றதல்ல என முடிவு செய்யப்பட்டது. நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு. அந்தோனிப்பிள்ளையின் முன்னிலையில் பதின்மூன்று அரிசிமூடைகளும் ஒரு படகில் ஏற்றப்பட்டு ஆழ்கடலில் வீசப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாணம் உள்ளவன், நாள் தோறும் தூய்மையே நாடுபவன், அவாவற்றவன், அடக்கமுள்ளவன், தூய வாழ்வு உள்ளவன், மெய்யறிவு உள்ளவன் உலகில் வாழ்வது அருமையே.

— புத்தபகவான்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 38?

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 25 உ (10-9-65)

# ஜனநாயகத்தைப் பாதுகாக்க வழி

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அளித்துவந்த ஆயுத உதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ளது. நீண்ட கால உதவித் திட்ட ஒப்பந்தத்தின் கீழ் பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு ஆயுதங்களுடன் புறப்பட்ட சில கப்பல்கள் இந்தியாவுக்குச் செல்லாமல் நிறுத்திவைப்பதென பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆனால் பாகிஸ்தானுக்கு எவ்வித உதவியுமளிப்பதற்கு இந்தோனேஷியா வெளிவெளியாக முன்வந்திருக்கிறது. சீனவும் பாகிஸ்தானுக்கு மறைமுகமாக ஆதரவும் உதவியுமளிக்கிறது.

இந்திய நாடு சுதந்திரம்பெற்றகாலம் தொடக்கம் ஜனநாயக முறையில் அந்த நாடு ஆட்சியும் அபிவிருத்தியும் அடைந்து வந்துள்ளது. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மத்திய அரசாங்கத்துக்கும் , ராஜ்ய அரசாங்கங்களுக்கும் மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளனர். ஐந்து வருடத்திட்டங்கள் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் இந்திய நாடு வழிவகுத்து வந்திருக்கிறது. ஆசியாவில் ஜனநாயக முறையை அனுசரித்து ஸ்திரமான ஆட்சி புரிந்துவரும் ஒரேயொருநாடுஇந்தியநாடே. ஆசியாவில் பெரிய ஜனநாயக நாடாக விளங்கும் இந்திய நாட்டின் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டியது உலகில் ஜனநாயக ஆட்சி அரசியல் முறையை விரும்பும் சகல நாடுகளினதும் கடமையாகும்.

இன்றுள்ள நிலையில் இந்திய நாட்டின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இரு வழிகளில் பெரும் ஆபத்து சூழ்ந்துள்ளது. ஒருபுறம் காஷ்மீர் பிரச்னை, மறுபுறம் இந்திய - சீன எல்லைப்பிரச்னை, ஐரோப்பாவில் மகா யுத்தங்களைத் தொடக்கிய பால்கன் பிரச்னை போன்று ஆசியாவில் இந்தியா, பாகிஸ்தான், சீன ஆகிய நாடுகளை பெரும் யுத்தத்துக்கு இழுக்குமோ என அஞ்ச வேண்டியுள்ளது. இது விஷயத்தில் ஐ. நா. ஸ்தாபனமும் ஐ. நா. பாதுகாப்புச் சபையும் கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற காலம் முதல் சமாதானமே அதன் முக்கிய நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. காந்தி அடிகளும் நேருவும் சமாதான வழியையே பின்பற்றினர். இக்கொள்கையினல் இந்தியா யுத்த சாதனங்களை உற்பத்தி செய்யவுமில்லை; யுத்தத்துக்கான ஆயத்தங்களைச் செய்யவுமில்லை. நாட்டின் அபிவிருத்தியிலும் பொது மக்களின் நலனிலுமே இந்தியா கவனம் செலுத்தி வந்தது. அதன்ஐந்து வருடத் திட்டங்களில் யுத்தசாதன உற்பத்திக்கோ, யுத்த ஆயத்தங்களுக்கோ இடம் அளிக்கப்படவில்லை. சீனவுடனன எல்லைத்தகராறுக்குப் பின்னரே பிரிட்டனிடமும், அமெரிக்காவிடமும் இந்தியா ஆயுத உதவி பெற்றது. இந்த உதவியும் கூட பிரிட்டனும் அமெரிக்காவும் அளித்த வாக்குறுதியில் ஒரு சிறுபகுதியையே இதுவரை இந்தியா பெற்றுள்ளது. அமெரிக்கா, பிரிட்டனிடம் பெற்ற ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பாவித்துள்ளது என்ற குற்றச்சாட்டு போதிய விசாரணையின்றி ஸ்தாபிக்கப்படக் கூடாது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அளிக்கப்பட்டு வந்த ஆயுத உதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ளதாகவும் இந்தியாவுக்கு நீண்டகால உதவித்திட்டத்தின்கீழ் பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்ட சில கப்பல்களை நிறுத்திவைக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. இந்தியாபாகிஸ்தான் பிரச்னை காரணமாக பிரிட்டனும் அமெரிக்காவும் இந்தியாவுக்கு உதவி அளிக்காவிட்டால் பாதுகாப்புச் சாதனங்களின்றிஇந்தியா பலவீனமடைய நேரிடும். இந்நிலையில் சீன, தனது எல்லைத் தகராறைச் சாட்டி அல்லது வேறு காரணத்தைக் குறிப்பிட்டு இந்தியா மீது யுத்தம் தொடங்கினல் இந்தியாவின் கதி என்ன? இதைவிட பாகிஸ்தானுக்கு உதவிபுரியஇந்தோனேஷியா வெளிவெளியாக முன்வந்துள்ளது. சீனவின்நிலை வெளிவெளியாகத் தெரியாதபோதிலும் இந்தியாவுக்கு எதிராக அது மறைமுகமாக பாகிஸ்தானுக்கு உதவி புரியுமென்பது தெளிவு. இவ்வித நிலையில் இந்திய நாட்டின் உண்மையான நண்பர்கள் யார்? ஆபத்தில் உதவி புரியக் கூடிய உண்மையான நட்பு நாடுகள் எவை? போர் நிறுத்தம் ஏற்படா விட்டால் தவறு இந்தியாமீதுதான் சுமத்தப்படுமா? இந்தியா யுத்த கஷ்டங்களை அனுபவிக்கத்தான் வேண்டுமா? ஜனநாயக நாடுகள் ஆசியாவிலேயே பெரிய ஜனநாயக நாடாக விளங்கும் ஒரு நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் சமயத்தில் உதவியை நிறுத்தியதுடன் ''சமாதானம்'' பற்றிப் பேசுகின்றன. கம்யூனிஸ நாடுகளோ ஜனநாயகத்துக்குஎதிராக உதவி அளிக்க முன்வந்துள்ளன. இந்நிலையில் ஆசியாவில் ஜனநாயக சுதந்திரத்தை பாதுகாக்க வழியென்ன?

# 75 ஆண்டுகள் நிறைவுபெற்ற யாழ். இந்துக்கல்லூரி

## அதன்வளர்ச்சியும் ஆற்றிய கல்விச் சேவையும்

எழுபத்தைந்து வயது தான் ஒரு மனிதன் சீவிக்கக் கூடிய வயதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அதன் நினைவுச் சின்னமாக 1890-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாண இந்துக் கல்லூரி இன்று மிளிர்கின்றது.

மற்றக் கல்லூரிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மிகவும் வயதில் குறைந்த தென்றேகூற வேண்டும். 19-ம் நூற்றுண்டில் வட பகுதியில் ஆறுமுக நாவலரும் தெற்கில் தர்மபாலாவும் நடாத்திய இந்து பௌத்த மறுமலர்ச்சியின் பின்னரே யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரி ஸ்தாபிக்கப் பட்டது. இதற்கு முன்னர் கல்வித்துறையில் வெளிநாட்டவர்களே பிரதான அங்கம் வகித்தனர்.

மக்கள் எப்படியாக வாழ்ந்தபோதிலும் தாம் கூறியவற்றை செய்கையில் காட்டாவிட்டால் அதனல் சமூகத்திற்கு எதுவித பலனும் ஏற்படாது. அப்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வழக்கறிஞர் சின்னத்தம்பி தாம் கூறியவற்றைச் செய்கையில் காட்டி வாழ்ந்து வந்தார். இவர் இரண்டாம் குறுக்குத்தெருவிலிருந்த பட்டின உயர்தர பள்ளியில் மிக அக்கறை கொண்ட பாதுகாப்பாளராக இருந்ததன் காரணமாக அப்பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்த வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளையே அதனை பாதுகாப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டார். முறையே இவர் இப்பள்ளிக்கூடத்தை சைவ பரிபாலன சபையிடம் கையளித்தார்.

இதன் பின்னர் பலர் முயற்சியால் சைவ மக்களின் கல்வி வளர்ச்சி பெறத் தொடங்கியது. பசுபதிச் செட்டியாரும் இத்துறையில் பல விதமாக உதவி புரிந்தார். 1890-ம் ஆண்டு சைவப்பரிபாலன சபை இப்பள்ளிக்கூடத்திற்கு இந்து உயர் பாடசாலை எனப் பெயரிட்டு வண்ணார்பண்ணை சிவன் கோவிலின் வடக்குப் பகுதிக்கு பள்ளிக்கூடத்தை மாற்றியது.

இதன் பின்னர் பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை பெறுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பிரச்சினையை பசுபதிச் செட்டியார் சுமுகமாக தீர்த்து வைத்து பாடசாலைக்கு தற்பொழுதுள்ள இடத்தையும் சகாயமான விலையில் பெற்றுக் கொடுத்தார்.

1880-ம் ஆண்டு அக்டோபர் மாதம் விஜயதசமியில் இக்கல்லூரி உருவாக்கப்பட்டது. கல்லூரியை நடத்துவதற்காக திருவாளர்கள் ரி. செல்லப்பாபிள்ளை, எஸ். நாகலிங்கம், பசுபதிச்செட்டியார், ஏ. சபாபதி, ரி. கைலாசபிள்ளை ஆகியோர் சபையினல் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு எஸ். நாகலிங்கம் மனேஜராகத் தெரிவுசெய்யப்பட்டார். திரு எஸ். அப்பாபிள்ளை முதல்தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

1891-ம் ஆண்டில் பொது போதனதிகாரி பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்த போது கல்லூரியின் நிலையைக்கண்டு சந்தோஷமடைந்தார். இதற்கிடையில் பிரதான மண்டபம் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் சகோதரர் முதலியார் [illegible] திறந்துவைக்கப்பட்டது. [illegible]

அதிகரித்ததன் காரணமாக கல்லூரிக்கு ஒரு சிறந்தஅதிபர் தெரிவுசெய்யப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தப்பதவிக்கு நெவின்ஸ் செல்லத்துரை தெரிவு செய்யப்பட்டார். புதிய அதிபரின் முயற்சியால் கல்லூரியில் பல மாறுதல்கள் ஏற்பட்டு கல்கத்தா, சென்னையில் நடைபெறும் சோதனைகளுக்கு மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நெவின்ஸ் செல்லத்துரை அடுத்து ஆங்கிலேயர் திரு. டபிள்யு. ஏ. யூறுப் அதிபராகக் கடமையாற்றினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

சபையை ஏற்படுத்தினேம். ஆனல்அந்தச்சபையின் கண்முன்பாகவே வியட்னமிலும் காஷ்மீரிலும் யுத்தத் தீ, பற்றி எரிகிறது. இரு தரப்பினருக்கும் கருணையுடனே ஆயுதங்களை அதிகம் கொடுத்து யுத்தத் தீயில் எண்ணெய் ஊற்றி வளர்க்கின்றார்கள் சில வள்ளல்கள்! ஆசியாக்காரர் ஆசியாக்காரருடன் போர் செய்யட்டும், போர் செய்து ஆசியா நாசமாகட்டும் என்று அவ்வளவு நல்லெண்ணம் சிலருக்கு!

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று சீனம் யோசனை கூறுகிறது. ஆனல் இதே யோசனையின்படி திபேத்திலே சர்வஜன வாக்கெடுப்பு நடத்த புது சீனம் தயாராக முன்வருமா என்று கேட்கின்றார் ஓர் அன்பர்.

ஃ ஃ ஃ

இந்தச்சண்டையைப்பற்றி இங்கு வந்திருந்த ராஜ் மோகன் காந்தியைக் கேட்டேன். இதுபற்றி அவர் பெரிதும் வருந்தினர். இரு தரப்பினரும் சமரச மனப்பான்மையுடன் ஒத்துழைத்தால்தான் விமோசனம் ஏற்படுமென்றும், இன்றேல் இரு தரப்புகளுக்கும் பெரும் நாசம்தான் என்றும் சொன்னர்.

'ஈழநாடு' கூறிய யோசனையின்படி, இலங்கைப் பிரதமர் இப்போது தலையிட்டு, இரு நாடுகளுக்கும் சண்டை நிறுத்தம் ஏற்படுத்த முனைந்துள்ளாராம். இச்செய்தியைக் கேட்க மிக மகிழ்ச்சியாகவுள்ளது. நம் சிறிய இலங்கை இரு நாடுகளுக்கும் பொதுவான நட்பு நாடு. ஏற்கெனவே சீனத்துக்கும் இந்தியாவுக்கும் யுத்த நிறுத்தம் ஏற்பட இலங்கை வெற்றிகரமாக முனைந்தது. இப்போது புதிய பிரதமர் டட்லி எடுக்கும் சமாதான முயற்சியும் அதேபோல் வெற்றி பெற்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

நல்ல வேளையாக நம் இலங்கை ஒரு சிறிய தீவாக ஒதுங்கியுள்ளது. அதனல் எல்லை முதலிய பிரச்னைகள் நமக்கில்லை. நம்மிடம் இராணுவமும் கிடையாது. அதனல் நம்மைப்பற்றி யாருக்கும் பயமில்லை. நமக்கும் பிறரைப்பற்றிப் பயமில்லை. நாம் மற்றச்சண்டைகளையும் சமரசமாகத் தீர்க்கவும் இதனல் அதிக தகுதியும் வாய்ப்பும் பெற்றிருக்கிறேமல்லவா?

செல்வ நெடுமாடஞ்
சென்று சேணேங்கிச்
செல்வ மதிதோயச்
செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச்
சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ்
செல்வஞ் செல்வமே

—திருஞானசம்பந்தர்.

# ஐயாறன் எழுதுகிறது

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் கிளம்பிவிட்டதாகச் செய்தியைக் கேட்டது முதல் தமக்கு மன நிம்மதியே இல்லையென்று ஓர் அன்பர் தெரிவிக்கிறார்.

இந்தத் தற்கொலை யுத்தத்தால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படுமோ தெரியவில்லை. டில்லியிலே இருட்டடிப்பு. விமான வெடிகுண்டு வீச்சுகள் எந்தச் சமயமும் எங்கும் நடக்கலாம். வட இந்தியாவிலே பல ராஜ்யங்களுக்கும் ஆபத்து ஏற்படலாமென்றும் எதற்கும் தயாராக இருக்கும்படியும் பிரதமர் சாஸ்திரி முன் எச்சரிக்கை செய்திருக்கின்றார். பாகிஸ்தானின் இரு பகுதிகளிலும் அவசரகால பிரகடனம் செய்திருக்கின்றார், அதிபர் அயூப். இரு தேச படைகளும் பல அரங்கங்களில் முன்னேறுகின்றன. யுத்தப் பகுதியிலே பொதுமக்கள் என்ன பாடுபடுகின்றார்களோ!

ஃ ஃ ஃ

நேரு பிரதமராக இருந்த காலத்தில் இந்தப் போர் அடங்கியிருந்தது. அவர் மறைந்து ஒரு வருடகாலமானதும் காஷ்மீர் போர் கிளம்பிவிட்டது பெரிய துரதிருஷ்டம். பிரதமர் சாஸ்திரி சாதுவென்றும் சமாதான சமரசப் பிரியர் என்றும் பெயர் போனவர். அவருக்கு இந்த யுத்தம்பற்றி மனதில் எவ்வளவு வேதனை இருக்கும்!

ஃ ஃ ஃ

முன்னர் காஷ்மீரில் சண்டை நடந்ததல்லவா? அப்போது நாளொன்றுக்கு இந்திய அரசாங்கத்துக்கு யுத்தச் செலவு சுமார் 95 லட்ச ரூபாய் ஆயிற்றும். இப்போது அதைவிட அதிகமாகலாம். பாகிஸ்தானுக்கும் இதேபோல் அதிக செலவாகக்கூடும். இரு தரப்பு மக்களின் நலனுக்காக இந்தப் பணம் செலவிடப்படின் எவ்வளவு மேலாக இருக்கும்.

செலவு ஒரு பக்கம் இருக்கட்டும். கஷ்ட நஷ்டங்கள், மனக்கசப்புகள், துவேஷங்கள் எவ்வளவு வளருகின்றன. இந்த யுத்தத்தைப் பற்றிய செய்திகளைப் படிக்கவும் கேட்கவும் பிடிக்கவே இல்லை. இது பரவாமல் சீக்கிரம் நிறுத்தப்படவேண்டுமென்று இரு தேசப் பொது மக்களும் பெரிதும் விரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பல வருடகாலமாக காஷ்மீர் பிரச்னை புகைந்து கொண்டிருப்பதாயும் இதற்கு இந்த யுத்த மூலம் ஒரு திட்டமான தீர்வு ஏற்பட்டுவிடலாமென்றும்ஓரன்பர் கருத்துத் தெரிவிக்கிறார்.

எந்தப் பிரச்னைக்கும் சரி யுத்தம் இதுவரை ஒரு தீர்வை ஏற்படுத்தியதில்லை. இதற்கு மாறாக யுத்தமூலம் புதுப்புதுச்சிக்கல்களும்புதுப்புதுப்பிரச்னைகளும் ஏற்படுவதையே சரித்திரம் காட்டுகின்றது.

ஃ ஃ ஃ

இனி உலகில் யுத்தமே ஏற்படாமல் தடுப்பதே முதல் உலக மகாயுத்தத்தின் முக்கிய நோக்கம் என்று கூறிவந்தனர். ஆனல் அந்த யுத்தம் முடிந்த 20 வருஷத்துக்குள் இரண்டாவது உலக யுத்தம் கிளம்பி பெரிய நாசங்களையும் மாறுதல்களையும் செய்துவிட்டது.

உலகில் சமாதானத்தையும் மனித நீதியையும் ஸ்தாபிக்க ஐக்கிய நாடுகள்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத் முனையில் கடும் சண்டை!

## பாரா துருப்புகளின் நடமாட்டம் அதிகரிக்கிறது

### இரு நாடுகளிலும் பலத்த கண்காணிப்பு நடவடிக்கைகள்

லண்டன், செப். 6

இந்திய-பாகிஸ்தான் சண்டை சிறிதும் தணிந்தபாடில்லை. மேலும் மேலும் சண்டை தீவிரமடைந்துவருகிறது. பாகிஸ்தான் விமானங்கள் இந்திய நகரங்களிலும் இந்திய விமானங்கள் பாகிஸ்தான் நகரங்களிலும் விமானத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன. இரு பகுதியினரின் பாரா துருப்புகளும் உளவுவேலைகளில் ஈடுபட்டுவருகின்றன.

இந்தியத் துருப்புகள் முன்னேறியிருக்கும் மூன்று முனைகளிலும் இரு பகுதியினருக்கிடையிலும் கடும்போர் நடைபெற்றுவருவதாகவும் இதன் காரணமாக பலத்தசேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளின் முக்கிய நகரங்களிலும் தேவையான கண்காணிப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. பெருந்தொகையான மக்கள் இந்தச் சண்டை காரணமாக அகதிகளாகியுள்ளார்கள் தாக்குதல்கள்ர நடைபெற்றுவரும் இடங்களில் வாழும் மக்களில் பலர் தங்கள் உடமைகளையும், உயிர்களையும் இழக்கவேண்டிய நிர்க்கதி ஏற்பட்டுள்ளது.

இருநாடுகளும் தங்களால் இயலக்கூடிய அளவுக்கு தங்கள் வலிமையைக் காட்டி வருகின்றன. விமானத்தாக்குதலே பெருவாரியாக நடைபெறுகிறது. பாகிஸ்தான் கடற்படையும் நேற்று யுத்தத்தில் ஈடுபட்டு இந்தியாவின் முக்கிய தளமான துவாரகை துறைமுகத்தை தாக்கி நாசமாக்கியது. மொத்தத்தில் யுத்தம் வலுவடைகிறது.

### ஹைதராபாத் முனையில் நடைபெற்ற கடும் சண்டை

புதுடில்லி, செப். 9

இந்தியத் துருப்புகள் இதுவரை பாகிஸ்தானுக்குள் மூன்று இடங்களில் பிரவேசித்து அதாவது மூன்று முனைகளை ஏற்படுத்தி தாக்குதல் நடத்திவருகின்றன. முதலில் பஞ்சாப்வழியாக லாகூர் முனையையும், இரண்டாவதாக ராஜஸ்தான் வழியாக ஹைதராபாத் முனையையும், ஜம்முவழியாக மூன்ருவது முனையையும் ஏற்படுத்தியுள்ளன.

ஹைதராபாத் முனையில் நேற்றிரவு கடும் சண்டை நடைபெற்றது. இந்த முனையை நேற்றுக்காலை சுமார் எட்டுமணியளவில் இந்தியா ஏற்படுத்தியிருந்தது. நேற்றிரவு சுமார் பத்துமணியளவில் பாகிஸ்தான் படைகள் இங்கு பெரும் பீரங்கிகள் கொண்டும், இயந்திரத்துப்பாக்கிகள் கொண்டும் பலமாக தாக்கின. ஆனல் இந்தியத்துருப்புக்கள் இவர்களின் தாக்குதல்களை சமாளித்து வலுத்தாக்குதல் நடத்தின.

### 3-வது முனையில் 5 மைல் முன்னேற்றம்

மற்றும் இரண்டு முனைகளிலும் இந்திய துருப்புகள் வெகு தைரியத்துடன் பதில் தாக்குதல் நடத்தினர். மூன்ருவது முனையான ஜம்மு முனையில் இந்தியத் துருப்புகள் இதுவரை 5 மைல் தூரம் முன்னேறியுள்ளன. ஊரிபூஞ்ச்பகுதியிலும், மற்றும் பல இடங்களிலும் இந்திய துருப்புகள் வலுத்தாக்குதல் நடாத்திவருகின்றன. மேற்கு பாகிஸ்தானில் உள்ள சர்கோடா விமானத் தளத்தின் மீது இந்தியா கடும் தாக்குதல் நடத்தியது.

### புதுடில்லியில் கடும் கண்காணிப்பு

புதுடில்லியில் இன்றும் பாகிஸ்தானிய விமானங்கள் பறந்தன. இன்று அதிகாலை நான்கு மணியளவில் பாகிஸ்தான் விமானங்கள் புதுடில்லி உயரே பறந்ததாக சமிக்ஞைகள் மூலம் தெரியவந்தது. எனினும் எவரும் விமானத்தைக் காணவில்லை.

கல்கத்தாவில் உள்ள பனகர் என்னும் இடத்திலும் பாகிஸ்தான் விமானங்கள் பறந்தாக அறியப்படுகிறது எனினும் ருசுப்படுத்த முடியவில்லை. வேறு பல முக்கிய இடங்களில் பாக் விமானங்கள் பறப்பதாகச் செய்திகள்கிடைக்கின்றன,

### பாரா துருப்புக்கள் நடமாட்டம்

நாட்டின் பல பகுதிகளிலும் பாகிஸ்தானிய பாரா துருப்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகள்பற்றி அறியவும், உளவு பார்ப்பதற்காகவுமே இவர்கள் இங்கு வருகிருர்கள் என்றும் இவர்கள்பற்றி வெகு கவனமாக இருக்க வேண்டுமென்றும் பாதுகாப்பு மந்திரி நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

இந்திய விமானப்படை, 21 பாகிஸ்தானிய விமானங்களை நாசப்படுத்தியதாகவும் 2 விமானங்களுக்கு சேதம் விளைவித்ததாகவும், 18பாரா துருப்புகளைக் கைப்பற்றியதாகவும் திரு. சாவன் தெரிவித்து விமானப்படையினரை பாராட்டிஞர்.

கல்கத்தாவைச் சேர்ந்த பனகரில் பல பரா துருப்புகள் இறங்கியுள்ளதாகவும், அவை கைப்பற்றப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. புதுடில்லியிலும் உத்தரபிரதேசத்திலும் பரா துருப்புகளின் நடமாட்டம் அம்கரித்துள்ளது. ராஜஸ்தானில் மட்டும் 24 பரா துருப்புகள் கைப்பற்றப்பட்டன..

### பாகிஸ்தானின் பதிலடி

ராவல்பிண்டி. செப். 9

பாகிஸ்தான் படைகள் இந்தியாமீது வலுத்தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தியாவின் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல்கள் தச்க முறையில் கொடுக்கப்படுகின்றன.

கடந்த வாரத்தில் 60 இந்திய விமானங்கள் நாசமாக்கப்பட்டதாக பாகிஸ்தானின் ஏயர்மார்ஷல் ஏ. நூர்ஹான் தெரிவித்தார். இரண்டாவது உலகயுத்தத்தில் பிரிட்டன் நடத்திய தாக்குதலுக்கு சமனை வகையில் பாகிஸ்தான் தாக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்-


லாகூர் முனையில் இந்திய துருப்புகள்மீதும் கடுந்தாக்குதல் நடத்தப்பட்டது. ஹைதராபாத் முனையில் முன்னேறிவந்த இந்தியத் துருப்புகள் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் முன்னேறவிடாது தடுக்கவும்பட்டனர். புதிய ஜம்முமுனையிலும் இந்திய துருப்புகள் மேற்கொண்டும் முன்னேற முடியாத வகையில் பலத்த தாக்குதல்களை பாகிஸ்தான் நடத்தியுள்ளது. சாம் பகுதியில் இந்தியத் துருப்புகள் விரட்டியடிக்கப்பட்டனர் என பாகிஸ்தான் தெரிவித்தது. இந்தியாவின் மூன்றுமுனைகளிலும் அதை முன்னேருதவாறு தடுத்து பாகிஸ்தான் பக்கம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது.

### இந்திய பாரா துருப்புகள்

மேற்குப் பாகிஸ்தானில் இந்திய பாராதுருப்புக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது, இவற்றுள் பல சிறைபிடிக்கப்பட்டுள்ளன,

இந்திய விமானப்படையைச் சேர்ந்த ஏராளமான 'கன்பரா' விமானங்கள் காரச்சிமீது விமானத்தாக்குதல் நடத்தியபோது 'பி. ஓ. எவ்' விமானங்கள் திருப்பிச்சுட்டதில் அவை ஓடிவிட்டன.

ஸ்ரீநகரில் 'விடுதலை போராட்ட வீரர்கள்' நேற்று 17 இந்தியர்களைக் கொன்றிருக்கிருர்கள். 71 பேர் காயமுற்றுள்ளனர். இதுவரை 262 இந்தியரை 'விடுதலை போராட்டவீரர்கள்' கொன்றிருப்பதாக பாகிஸ்தான் ரேடியோ தெரிவித்தது. மூன்று பாலங்களையும் இவர்கள் நாசப்படுத்தி முக்கிய சேவைத் தொடர்புகளை துண்டித்துள்ளார்களாம்.




ஜாகர்த்தாவில்

## இந்திய தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

### 3 கார்கள் நாசம்

ஜாகர்த்தா, செப். 9

இந்தோனேஷியாவில் உள்ள இந்திய தூதரகத்தின் முன்னல் இன்று காலை சுமார் 2000 இந்தோனேஷியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி தூதரகஅதிகாரிகளுக்கு சொந்தமான 3 மோட்டார் வண்டிகளை நாசப்படுத்தினர். கட்டடத்தின்யன்னல்களும் உடைக்கப்பட்டன,

ஜாகர்த்தாவில் உள்ள இந்த தூதரகத்தின் முன்னல் ஆவேசம் கொண்ட இந்தோனேஷிய கோஷ்டி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

சிறிது நேரத்தின் பின்னர் தூதரக வளவுக்குள் நுழைந்து கற்களாலும், இரும்புக் கம்பிகளாலும், மோட்டார் வண்டிகளையும் மற்றும் யன்னல்கள், பல உபகரணங்களையும் நாசப்படுத்தியது

தூதரக வாசற்கதவில்பணியாற்றிய காவலாளிகள் கூட்டத்தைத் தடுப்பதில் தோல்வி கண்டனர். இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## சமரசம் ஏற்பட சிபார்சுகள் உண்டு

### பத்திரிகை நிருபர்களிடம் பொதுக்காரியதரிசி யுதாண்ட்

கராச்சி, செப். 9

ஐ. நா. பொதுக்காரியதரிசி யு தாண்ட் இன்று காலை ராவல்பிண்டி வந்



துடைந்தார். இந்திய — பாகிஸ்தான் சண்டையை சமரசமாக தீர்த்துவைக்கும் பொருட்டு இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இவர் வருகிருர்.

திரு.யு தாண்ட் லண்டன், டெஹ்ரான், ஜெனிவா ஆகிய விமானங்களில் தரித்து நின்ற போது பத்திரிகை நிருபர்கள் இவரை சுற்றி வளைய வந்து கேள்விக்கணைகளைத் தொடுத்தார்கள்.

இந்தியப் பிரதமர் சாஸ்திரியிடமும், பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானிடமும் தெரிவித்து சமரசத்தை உண்டுபண்ண சில சிபார்சுகள் தம்மிடம் உண்டென்றும் இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு தான் பகிரங்க அறிக்கை எதுவும் வெளியிடமாட்டார் எனவும் தனது அறிக்கையை பந்தோபஸ்து சபையிடம் சமர்ப்பிக்க போவதாகவும் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் திரு. யு தாண்ட் தெரிவித்தார்.

இவர் நியுயோர்க்கிலிருந்து புறப்படுமுன் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் பாகிஸ்தான் இந்திய பிரச்னை சிக்கலானதென்றும் இதை தீர்க்கலாம் என்ற நம்பிக்கை தனக்கு உண்டு எனவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாஜங்கள் ஆட்சேபம்

பருத்தித்துறை, வியாழன் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் கொள்வனவு செய்யவருபவர்கள் வங்கிகளால் உத்தரவாதம் செய்யபட்ட காசோலைகளையே வழங்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து வடமராட்சிப் பகுதியில் உள்ள பலநோக்கக் கூட்டுறவுச் சமாஜங்கள் மகஜர் ஒன்றை அனுப்பிவைக்க முடிவு செய்துள்ளது.

புலோலி பல நோக்கக் கூட்டுறவுச் சங்க சமாஜம் கட்டைவேலி, உடுப்பிட்டி யூனியன்களது ஆதரவுடன் இந்த உத்தரவை ஆட்சேபிப்பதுடன் வடபகுதியில் உள்ள ஏனைய சமாஜங்களது ஒத்துழைப்பையும் பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## "இந்துக்களுக்கும் விடுமுறை வழங்குக"

கொழும்பு, வியாழன் அரசாங்க எழுதுவினைஞர் சங்க 4-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானத்தை சங்கப் பொதுக்காரியதரிசி உள்நாட்டுமந்திரிக்கு அனுப்பியுள்ளார்.

''தேசிய அரசாங்கம் போயா தினங்களை விடுமுறை நாட்களாகவும் வாரத்தில் ஐந்து நாட்கள் மாத்திரம் வேலை நடக்க வேண்டுமென்றும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருப்பதால் இக் கொள்கைகளை அமுலாக்கும்போது அரசாங்க சேவையிலுள்ள பௌத்தர்களல்லாதோரின் சமயவழிபாட்டிற்குக் குந்தகம் விளையாவண்ணம் வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் முறையே இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் காலையில் இரண்டுமணி நேர உத்தியோகவிடுமுறை கொடுக்கவேண்டுமென இம் மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.''

இந்துக்களுக்கும் சமய வழிபாட்டை அனுட்டிக்க வெள்ளிக்கிழமைகளில் இரண்டுமணிநேர விடுமுறை வழங்கவேண்டுமென்று மந்திரிக்கு அனுப்பிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

## இளம்பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், வியாழன் நகை செய்ய வைத்திருந்த பணத்தை தகப்பனுர் வயலுக்குச்செலவுசெய்ததற்காக ஓர் இளம்பெண் நச்சுத்திராவகமருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கல்மடுவில் நிகழ்ந்துள்ளது.

கல்மடுவைச் சேர்ந்த இளம்பெண் சரோஜினி தேவியின் மரணம்பற்றி நடந்த மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது. மரணவிசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம் மரணவிசாரணை நடத்தினுர். டாக்டர் லூக்குசைப்பிள்ளை, காலஞ்சென்றவரின் தந்தை கணபதிப்பிள்ளை ஆகியோர்சாட்சியமளித்தார்கள். தற்கொலையெனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## கமம் பார்க்க சென்றவர் மரணம்


யாழ்ப்பாணம், வியாழன் வேலணை கிழக்கை சேர்ந்த முத்தையா பாலசிங்கம் என்பர் கிளிநொச்சிக்கு கமம்பார்க்கச்சென்ற இடத்தில் மரணமானுர்,

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம், இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## வரவேற்புபசாரம்

வேலணை, வியாழன் அமைச்சர்கள் திரு. பிலிப் குணவர்த்தனுவுக்கும் திரு. எம். திருச்செல்வத்திற்கும் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினத் திரு. வ. நவரத்தினத்திற்கும் ஒரு வரவேற்புபசாரம் நடாத்துவதென செட்டிபுலம் சனசமூகநிலையம் தீர்மானித்திருக்கின்றது.

## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



ஒவ்வோர் சைவ நன்மக்களாலும் வணர்ந்து புதிய ரதங்களை விரைவில் உருவாக்க அடியார்கள் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது.

**பணம் அனுப்பும் விலாசம்:-**

தனாதிகாரி, திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.


## நடராசனுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசை இவ்வருடமும் இரண்டாவது முறையாகப் பெற்ற வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராசன் நேற்றுக் காலை ரயிலில் யாழ்ப்பாணம்வந்தபொழுது யாழ்ப்பாணம் புகையிரத ஸ்தானத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நவாலி கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் முதலியார் வை. மகேசன், காரியதரிசி திரு. உ. வே. தேவகடாட்சம், சி. ஜே. இளையதம்பி, செல்லத்துரை, குமாரசாமி, அ. நாகராஜன் ஆகியோர் உட்படப் பலர் இவ்வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர். இம்முறை பரிசுபெற்ற அவருடைய ''பொம்மைவண்டி'' என்ற நாடகநூல் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியுமென அங்கு வந்த பலராலும் பாராட்டப்பட்டது.

நடராசனின் இந்நாடகத்தை நவாலியூரிலுள்ள நாடகக் குழுவினர் மேற்பார்வையில் மேடையேற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து வருகின்றனர்.

## அந்தோனியார் திருநாள்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் பண்ணை ரோட்டிலுள்ள குருஷடித் தீவு ஆலயத்தின் அர்ச். அந்தோனியார் திருநாள் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். இதனையடுத்து திவ்விய பூசையும், சற்பிரசாத ஆசீர்வாதமும் ஞாயிற்றுக் கிழமை காலை பாடற்பூசையும் திருச்சுருப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.




### புறப்படும் நேரங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ரயில் புறப்படும் நேரங்கள் வருமாறு:-

காலை 6-02 ''யாழ்தேவி'' 7-35 சாதாரண ரயில், மத்தியானம் — 2-25 ''யாழ் தேவி'', இரவு— 7-00 மெயில், ஞாயிற்றுக் கிழமைகழில் மட்டும் இரவு— 8-50 க்குகொழும்புக்குஒருவிசேஷ புகையிரதம் செல்லும்.

யாழ்ப்பாணத்தி லிருந்து பளைக்கு ரயில புறப்படும் நேரங்கள் வருமாறு:-

மத்தியானம் 1-20, மாலை 4-00 ரயில்கார், மாலை4-48, 5-50.

கிளிநொச்சிக்குகாலை 8-45 க்கும், அநுராதபுரத்துக்கு இரவு 8-50க்கும் யாழ்ப்பாணத்திலிருந்து ரயில்கள் புறப்படும்.

### வந்துசேரும் நேரங்கள்

கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேரும் நேரங்கள்:-

காலை 5-00 மெயில், மத்தியானம்—1-02யாழ்தேவி, மாலை—5-54 சாதாரண ரயில், இரவு—9-19 யாழ் தேவி.

பளையிலிருத்து புறப்படும் ரயில்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும் நேரங்கள்:-

காலை—6-50, 8-03, 8-41 (ரயில் கார்) இரவு—8-00.

அநுராதபுரத்திலிருந்துபுறப்படும் ரயில் காலை—10-30 க்கும், கிளிநொச்சியிலிருந்து புறப்படும் ரயில் மாலை 4-35 க்கும் யாழ்ப்பாணத்தைவந்தடையும்.

## இன்று ஆரம்பமாகும் தென்மராட்சி இசைக் கலைமன்ற இசைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி தென்மராட்சி இசைக் கலைமன்றத்தின் பத்தாவது ஆண்டு இசைவிழா இன்று மாலை சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோவில் முன்றலில் ஆரம்பமானது. சமீபத்தில் காலஞ்சென்ற ஆலத்தூர் சகோதரர்களில் ஒருவரான இசைமேதை ஆலத்தூர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள அரங்கில் இன்று ஆரம்பமாகும் இசை விழா 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை இரவு நடைபெறும் நிகழ்ச்சிகளுடன் முடிவடைகிறது.

இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்.

மாலை 6-30 — 7-45 திரு. எம். பஞ்சாபிகேசபிள்ளை கோஷ்டியினர் — நாதஸ்வரம், 7-45 — 8-15 செல்வி கருணகலாவல்லி செல்லையா — வயலின், செல்வன் பொ, ஆத்மானந்தா— மிருதங்கம், 8-15 — 8-30 திரு. எஸ், விஞசித்தம்பி — ஆரம்பவுரை, 8-30 — 9-15 செல்வி கனகநாயகி கனகரத்தினம் — பாட்டு, செல்வி நீலாம்பிகை செல்லையா — வயலின், செல்வன் பொ. ஆத்மானந்தா — மிருதங்கம், 9-15 — 9-30 தலைமையுரை — திரு. வ. ந. நவரத்தினம் (பா. உ.), 9-30 — 10-30 திரு. பி. ஸி. இரத்தினவேதன்— பாட்டு, திரு. எஸ். சோமஸ்கந்தசர்மா — வயலின், திரு. எஸ். இராமநாதன் — மிருதங்கம், கோவில் தர்மகர்த்தா திரு. ப. தம்பையாவை கௌரவித்தல், 10-30 — 11-45 எஸ். விஞசித்தம்பி — பாட்டு, திரு. எஸ், வைத்தீஸ்வரஐயர் — வயலின், செல்வன் வி. மணிஐயர் — மிருதங்கம்.

ஜீ.சி.ஈ.உயர்தர

## விண்ணப்பமுடிவுதிகதி ஒத்திவைப்பு

பம்பலப்பிட்டி, வியா. ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முடிவு திகதிஇரண்டாம்முறையாக இம்மாதம் 17-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இந்திய . . .

(3-ம் பக்க தொடர்ச்சி) சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

இன்று காலை ஜனுதிபதி சுகர்ணே தலைமையில் இந்தோனேஷிய சுப்ரீம் சபை கூடி இந்திய—பாகிஸ்தான் சண்டையில் பாகிஸ்தானுக்கு எவ்விதம் உதவுவது என்பதுபற்றி ஆராய்ந்தது.

பிலிப்பைன்ஸிலும் இந்திய தூதரகத்தின் முன் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக மணிலாவில் இருந்து கிடைத்துள்ள செய்தி தெரிவிக்கின்றது.

சுமார் 400 மாணவர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று இன்று காலை''பாகிஸ்தானை ஊடுருவல் செய்யாதே'' ''சண்டையை உடன் நிறுத்து'' என்ற அட்டையை தாங்கி இந்திய தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியது. சம்பவம் எதுவும் நடைபெற்றதாக அறிவிக்கப்படவில்லை.

டாக்காவிலும் முக்கிய வீதிகளில் பொதுமக்கள் கூட்டம் ஒன்று ''நாங்கள் இந்தியாவுடன் சண்டை செய்யவில்லை'' என்ற கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதாக தமக்கு செய்தி கிடைத்துள்ளதாக இந்திய அதிகாரி ஒருவர் புதுடில்லியில் தெரிவித்தார். பாகிஸ்தான் இந்தியாமீது தாக்குதல் நடத்துவதை இந்த ஆர்ப்பாங்டக்காரர் ஆட்சேபித்து கோஷஎழுப்பினுர்களாம்.

## பாரதிவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி உடுவில் முருகமூர்த்தி கோவில் முன்றலில் சுப்பிரமணிய பாரதியார்தினவிழாவை நாளை மாலை மறுமலர்ச்சிமன்றத்தினர் கொண்டாடுகிருர்கள்.

விழாவில் சொற்பொழிவுகள், நாடகங்கள், நடனங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Sex Educational Fllm!!
FALSE SHAME
Adults Only

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2, 6, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜிகணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்
கைகொடுத்த தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### நகரசபை
வவுனியா

1965-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சனிக்கிழமை 9-ந் திகதி நண்பகல் 12 மணி வரை வவுனியா நகரசபை அக்கிராசனரால் பொதுச் சந்தை கட்டுதற்கு கேள்வி விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களை வவுனியா நகரசபைக் காரியாலயத்திலிருந்து ரூ. 50/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விகள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும்.

3. ரூ. 100,000/- மேல் அரசாங்கப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களாயும் கீழ் வருவனவற்றை காட்டக் கூடியவர்களாயும் இருப்பவர்களே இதற்கு தகுதியுள்ளவர்களாவார்கள்.

(அ) பதிவு செய்யப்பட்டதற்கு அத்தாட்சி.

(ஆ) 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் வவுனியா நகரசபை காரியாலயத்தில் கேள்வி விளம்பர கட்டுப் பணமாக ரூ.500/-செலுத்த வேண்டும்.

4. மேலும் விபரங்களும், தகவல்களும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரிப் படங்கள் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

எம். பொன்னையா,
அக்கிராசனர், நகரசபை,
வவுனியா.

நகரசபைக் காரியாலயம்,
வவுனியா,
செப்டம்பர் 4, 1965.

849

## புதிய கமிட்டி

பம்பலப்பிட்டி, வியா.

அரசாங்க மனநோய் வைத்திய சேவையை விசாரணை செய்வதற்காக ஒரு கமிட்டியை சுகாதார மந்திரி திரு எம். டி. ஏச். ஜெயவர்த்தன விரைவில் நியமிக்கவிருக்கிறார்.

முன்னாள் சுகாதார டைரக்டர் டபிள்யு. ஜி. விக்கிரமசிங்கி இந்தக் கமிட்டியின் தலைவராக நியமிக்கப் படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மனநோய் வைத்திய சேவையை மாற்றியமைத்து நோயாளர்களுக்கு நல்ல வைத்தியத்தை அளிப்பது குறித்தும், இன்னும் பல்வேறு விஷயங்களை குறித்தும் இக்கமிட்டி விசாரணை செய்யும்.


வியாபாரம் பெருக
...ளம்பரம் செய்க



கைரேகை சாஸ்திர நிபுணன்

### புரபெசர் விந்தா அவர்கள்



தற்பொழுது அறை இலக்கம் 1, லேக்வியூ ஹோட்டல், யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கிறார். தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை அவரை சந்திக்கலாம். ஒரு வருட உத்தரவாதம் செய்த யந்திரத் தகட்டின் காலம் முடிந்தோர் புதுப்பித்துக் கொள்ளலாம்.

846




# விளையாட்டுப் பகுதி

மல்லாகம்

## விசாலாட்சி வித்தியாசாலை விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி திரு. சி. பொன்னையா தலைமையில் நடைபெற்றது. பாரதிஇல்லம் 115 புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும், நாவலர்இல்லம் 112 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வள்ளுவர் இல்லம் 90 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. வெற்றிபெற்ற மாணவர்களுக்குத் தலைமை ஆசிரியர் திரு. க. நாகரத்தினம் பரிசில்கள் வழங்கினார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:

குண்டெறிதல் - (மே. பி) ஆண்: கு. முருகையா, இ. அருள்நேசன், இ. சிவநேசன், க. விக்னேஸ்வரன்.

நீளம்பாய்தல்- (கீ. பி.) ஆண்: க. விக்னேஸ்வரன், இ. வரதராஸ், சு. கந்தசாமி. (ம. பி) ஆண்; பொ. நித்தியானந்தம், இ. குகனேசன், நா. கதிர்காமநாதன். (மே. பி.) ஆண்: இ. அருள்நேசன், இ. சிவனேசன், கு. முருகையா.

50 யார் ஓட்டம்-(பா.பி) பெண்: சந்திராதேவி, ந. யோகேஸ்வரன், ந. சுகுணவல்லி.

100 யார் ஓட்டம்-(கீ.பி.) ஆண்: க. விக்கினேஸ்வரன், இ. வரதராஸ், ம. தில்லை நடேசன்.

100 யார் ஓட்டம் (ம.பி.) ஆண்: இ. குகனேசன், பொ. நித்தியானந்தன், நா. கதிர்காமநாதன்.

100யார்ஓட்டம்- (மே.பி) ஆண்: கு. முருகையா, இ. அருள்நேசன், இ. சிவனேசன்.

சமநிலைஓட்டம் (மே.பி) பெண்: சு.பகவதி, திசரோஜினிதேவி, க. தனலட்சுமி.

தடையோட்டம் (ம.பி.) பெண்- ம. அன்னலட்சுமி, அ. அன்னபூரணம், கே. வசந்தாதேவி.

ஊசிநூல் கோர்த்தல்- கீ. பி. பெண்: சு. தேவேஸ்வரி, க. அம்பிகாபதி, பொ. இராசேஸ்வரி.

அஞ்சல்ஓட்டம்- ஆண்: நாவலர், பாரதி, வள்ளுவர்.

அஞ்சல்ஓட்டம்- பெண்: வள்ளுவர், பாரதி, நாவலர்.

யாழ். அமைச்சூர்

## 17-வது வருடாந்த விளையாட்டுப்போட்டி

குரும்பசிட்டி, வியாழன்

யாழ். அமெச்சூர் விளையாட்டுக் கழக ஆதரவில் கழகங்களுக் கிடையிலான 17-வது வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் வெள்ளி, சனி இரு தினங்களும் மத்தியகல்லூரிமைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திரு. ஐ. பி. துரைரத்தினம் தலைமையில் நிகழவிருக்கும் இப்போட்டியில் அரியாலை யுனைட்டெட், ஜொலி ஸ்ராஸ், ரூக் அன் வீல்ட், தெல்லிப்பழை மகாஜன்ஸ், குரும்பசிட்டி உதயதாரகை, வல்வெட்டி புளூஸ், யங்மென்கில்ட் ஆகிய ஏழு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. சுமார் 111 வீரர்களும் 23 வீர ரமணிகளும் பல்வேறு வகையான விளையாட்டுக்களிலும் கலந்து கொள்வர். இப்போட்டிக்கான ஒழுங்குகளை திரு. சி. சச்சிதானந்தம் தலைமையிலான குழு சிறந்த முறையில் செய்து முடித்துள்ளது.

## கென்னடி கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

'சித்திராலயா'வின் ஆதரவில் யாழ் கென்னடி கிரிக்கெட் கோஷ்டிக்கும் யங்-பற்றிசியன் கிரிக்கெட் கோஷ்டிக்கு மிடையில் நடைபெற்ற மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டியில் கென்னடி கிரிக்கெட் கோஷ்டி 5 ஓட்டங்களால் யங்பற்றிசியன் கோஷ்டியை தோற்கடித்தது.

முதல் ஆட்டத்தில் கென்னடி கோஷடி எல்லா விக்கட் நஷ்டத்துக்கும் 55 ஓட்டங்களைப் பெற்றது, சந்தியா மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி 21 ஓட்டங்களை பெற்றார். யங்பற்றிசியன் கோஷ்டி வீரர் ராஜப்பு திறமையாகப் பந்தெறிந்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தி 10 ஓட்டங்களைக் கொடுத்தார். யங்பற்றிசியன் கோஷ்டி தனது முதல் ஆட்டத்தில் எல்லா விக்கெட்டுகள் நஷ்டத்துக்கும் 39 ஓட்டங்களை எடுத்தது.

கென்னடி கோஷ்டியைச் சேர்ந்த சேவியர் திறமையாக பந்தெறிந்து 4 விக்கெட்டுகளை எடுத்து 10 ஓட்டங்களைக் கொடுத்தார். பெனடிக் திறமையாக பந்தெறிந்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தி 24 ஓட்டங்களை கொடுத்தார்.

இரண்டாவது ஆட்டத்தில் கென்னடிக் கோஷ்டி எல்லா விக்கெட்டுகள் நஷ்டத்துக்கும் 30 ஓட்டங்களை பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் யங்பற்றிசியன் கோஷ்டி எல்லா விக்கெட்டுகள் நஷ்டத்துக்கும் 41 ஓட்டங்களைப் பெற்றது.

## கட்டாய சேவை

பம்பலப்பிட்டி, வியா

1964-ம் ஆண்டு கட்டாய சேவைச் சட்டத்தின்படி வைத்திய, விஞ்ஞான பட்டதாரிகளை அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற நிதியமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா தெரிவித்த ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தச் சட்டத்தை மீறும் தொழில்நுட்ப, வைத்திய பட்டதாரிகள்மீது அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு
**இராசரத்தினம் - கனகேஸ்வரி**

திரு. வ. கந்தையா (காலஞ்சென்ற கோப்பாய் தெற்குக் கிராமாதிகாரி) திருமதி கந்தையா ஆகியோரின் மகனாகிய செல்வன் க. இராசரத்தினத்துக்கும் (உதவி நிலக் கண்காணிப்பாளர் தியத்தலாவை) கொக்குவில் திரு. இ. செல்லையா (பதிவு செய்யப்பட்ட வைத்தியர்) திருமதி செல்லையா ஆகியோரின் மகளாகிய செல்வி கனகேஸ்வரிக்கும் மணமகளில்லத்தில் (சொர்ணவாசா, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்) 12-9-65 ஞாயிற்றுக் கிழமை பகல் 1 மணிக்கும் 2 மணிக்குமிடையில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு நண்பர்களும் உறவினர்களும் அழைக்கப்படுகின்றனர்.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை. தயவுசெய்து இவ்வழைப்பையே ஏற்றுக் கொள்ளவும். புதிய செம்மணித்தெரு, கல்வியங்காடு. யாழ்ப்பாணம். 990

### கல்வி

மாணவிகளுக்கு G. C. E. விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்படும். விசேஷமாக ஆங்கிலம், கணக்கு, ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படும். விபரங்களுக்கு நேரிலோ அல்லது தபால்மூலமாகவோ விண்ணப்பிக்கவும். செல்வி ஜெ. சிதம்பரப்பிள்ளை, 9, சோமசுந்தரம் எவனியு, யாழ்ப்பாபாணம். 1010

ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்திபெறவேண்டுமானல் எங்கள் காலை / மாலை வகுப்புகளில் சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர். 998

### தேவை

கொழும்பு தனியார் ஸ்தாபனத்திற்கு ஒரு பெண் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர். தேவைஆங்கிலம் ஜி. சி. ஈ. தேர்ச்சிபெற்றவராக இருக்கவேண்டும். நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளுடன் உடனே விண்ணப்பிக்கவும். 792. அழுத்மாவத்தரேட், முகத்துவாரம் (Mutwal), கொழும்பு. 1008

### விற்பனைக்கு

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் வடக்கு வீதியில் 6—7 பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. விரும்புவோர் கீழ்க்காணும் விலாஸதாரருடன் தொடர்புகொள்ளவும்:- குணரத்தினம் கந்தையா, 10, வைமன் ரேட், யாழ்ப்பாணம். 1012

வான்கோழி முட்டையும், வான்கோழியும் (Turkey) விற்பனைக்குண்டு. மு. கனகசபை, 'வளர்மதி', சூராவத்தை, சுன்னாகம். 1009

## 75 ஆண்டுகள். . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் லண்டன் சர்வகலாசாலை சோதனைக்காக மாணவர்களுக்கு கல்வி புகட்டினார்.

1934-ம் ஆண்டில் திரு ஏ. குமாரசாமி அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் காலத்திலும்கல்லூரியில் அதிக முன்னேற்றம் காணப்பட்டது.

இலவசக் கல்வியின் பின் கல்வித்துறையில் பலமாற்றங்கள் காணப்பட்டன. இக்கொள்கையையும் இந்துக் கல்லூரி ஏற்றுப் பல புதிய மாணவர்களையும் கல்லூரியில் சேர்த்துக்கொண்டது. 19 ஆண்டு சேவைக்குப் பின்னர் சடுதியாக திரு குமாரசாமி 1952-ம் ஆண்டில் காலமானார். இதைத் தொடர்ந்து திருவாளர்கள் வி. எம். ஆசைப்பிள்ளை, சி. சபாரத்தினம் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர்கள்.

தற்பொழுது கல்லூரியின் பழைய மாணவரான திரு. சி. சபாரத்தினம் கல்லூரியின் அதிபராக இருக்கும் பொழுது 75-வது ஆண்டு விழா கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாகும்.





## வெள்ளி 10 - 9 - 65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 பக்திப்பாடல்கள், 7-45 படப்பாட்டுக்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர் விருப்பம், 10-00 கிளாரினெட், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, மாலை 6-05 இரவு 7-15)

319.1 மீ (940 கி. சை.)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 காந்திஅஞ்சலி,

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 மெல்லிசை, 1-50 குரலிசை, 2-50 கல்வி ஒலிபரப்பு.

மாலை 5-00 இசைமஞ்சரி, 5-30 கே. எஸ். சுப்பிரமணியபிள்ளை — நாதஸ்வரம்.

இரவு 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 இசைப் பயிற்சி, 6-35 மெல்லிசை, 6-40 பொது நோக்கு — பேச்சு, 6-45 திண்ணைப் பேச்சு, 7-00 நாதஸ்வரம், 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 நாடகம், 8-30 திரைப் படஇசை, 9-15 வயலின்.


## ஐஸ்

ஐப்பசி தொடக்கம் மாசி வரை எங்களிடம் ஐஸ்வாங்குபவர்கள் தயவுசெய்து முன்னதாகவே விண்ணப்பிக்கவும்.

இராசமைந்தர் ஆலை,
தாளையடி,
செம்பியன்பற்று

850


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "வெளிநாட்டில் கல்வி பயின்று தாய்நாட்டுக்குச் சேவை செய்க"

## பாராட்டுவிழாவில் பேச்சு

சுழிபுரம். புதன்

"எமது நாட்டில் திறமை வாய்ந்த மாணவர்கள் உயர் படிப்புக் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிருர்கள். இங்குள்ள சர்வகலாசாலைகளில் இடநெருக்கடி ஒருபுறமும் மறுபக்கத்தில் போதிய வசதிகள் கிடைக்காமல் இருக்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஓர் சர்வகலாசாலையை ஸ்தாபிப்பதாகக்கூறியும்கடைசிநேரத்தில் இத்திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. இப்படியான தருணத்தில் எமது திறமைமிக்க மாணவர்கள் வெளிநாட்டுக்குச்சென்று உபகாரச் சம்பளத்தில் உயர் கல்வியைப் பெறுவதை நாம் பாராட்டுவதுடன் பெருமையடைய வேண்டும்"என்று வடபகுதி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஐ. ஆர். அரியரத்தினம், ரஷ்யாவுக்கு உபகாரச் சம்பளத்தில் டாக்டராகக் கல்வி கற்கச்செல்லும் எஸ். பத்மநாதனுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விருந்து வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எமது வாலிபர் வெளிநாடுகளுக்கு கல்வி கற்கச் செல்வதால் பலவகையான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பல நாட்டவர்களின் கூட்டுச் சேர்க்கையும். நல்ல பழக்க வழக்கங்களும் அடைவதுடன் உயர்ந்தவர்களாகவும் அவர்கள் வாழ வழி பிறக்கிறது என்றும் கூறினுர்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பிரதம வைத்தியர் டாக்டர் என். ரி. சம்பந்தன் பேசுகையில், உலகத்திலுள்ள சர்வகலாசாலைகளில் மிகவும் சிறந்ததான ரஷ்ய நாட்டு லுமும்பா சர்வகலாசாலையில் வைத்தியக் கல்வியைப் பெறுவது பாராட்டத்தக்கதாகும். எனினும் எமது பகுதியில் இருந்து முதன்முறையாகச் செல்லும் இவ்வாலிபர் தனது திறமையை நன்கு பயன்படுத்தி சிறந்த நிபுணுக எமது நாட்டுக்கு வர வேண்டும். எனினும் இவரைப் போலவே மற்றைய தமிழ் மாணவர்களும் தங்கள் கல்வியில் ஊக்கம் செலுத்தி, வெளிநாடு சென்று உயர்கல்வி பெற்றுத் தாய்நாட்டுக்குப் பெரும் சேவையாற்றவேண்டும் என்றும் கூறினுர்.

திருவாளர்கள் கே. குகதாசன், வி. தம்பு, எஸ். சிவஞானம், கே. வைரமுத்து, எஸ். நாகராஜா, எஸ். கந்தசுவாமி ஆகியோரும் பாராட்டிப் பேசினர்.

# 'சைவ உலகிற்கு பெருநஷ்டம்'

## சிவமணிக்கு கேதீச்சரத்தில் அஞ்சலி

திருக்கேதீஸ்வரம், புதன்

'சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் மறைவு சைவ உலகிற்கு பெரும் இடுக்கண் விளைவித்துள்ளது. இப்பெரும் தொண்டர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப் பின் தோன்றிய சிவ, தொண்டராவார்.

இவ்வாறு திருக்கேதீச்சர திருவாசக மண்டபத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன் மறைவு குறித்து நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் மன்னுர் கச்சேரியைச் சேர்ந்த திரு. ஆ, சிதம்பரப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார். இக்கூட்டம் மன்னுர்ப்பகுதி மாந்தை வாழ் மக்களால் கூட்டப்பட்டது.

பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட மன்னுர் பட்டினசபைத்தலைவர் திரு. ஜனுப் ம. செ. அ. றகீம் பேசுகையில் "சாதி மத வேறுபாடின்றி, சிறியார் பெரியார் என்ற பாகுபாடில்லாது சைவத்திற்கும் தமிழுக்கும் இப்பெரியார் சேவை செய்ததுடன் மன்னுர் மாவட்டத்திற்கு திலகம்போன்று விளங்கும் திருக்கேதீச்சரத்தை வளர்ப்பதற்காகவும் சிவப்பணியில் அயராது உழைத்தார்" என்றார்.

சைவப்புலவர் செல்லத்துரை பேசுகையில்: சிவபதம் அடைந்த சிவமணி சுகபோகங்களைத் துறந்து காட்டை நாடாக்கி உயிரையும் அர்ப்பணித்தாரென்றும், மன்னுர் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியிலேயே தமது இறுதிப்பேச்சை நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கரவைக் கிழான், எம். பி. எம். முகமது காசிம், ஆர். எம். சண்முகம், ஆர். எம்.வி. வேலுச்சாமி உட்பட பலர் மறைந்தபெரியாரின்சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

சிவமணியின் ஆன்மா சாந்தியடையஇரண்டுமிநிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## நாகநாதன்

### சனிக்கிழமை வருகிறுர்

யாழ்ப்பாணம், வியா

சிகிச்சை பெறும்பொருட்டு லண்டன் சென்றிருந்த நல்லூர்த் தொகுதி எம். பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிருர்.

சனிக்கிழமை காலை டாக்டர் நாகநாதன் கொக்குவில் ரயில்நிலையத்தில் வரவேற்கப்படுவார். யாழ் மேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா, பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பலர் வரவேற்புவைபவத்தில் கலந்து கொள்வார்கள்.

## புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், வியா.

திரு. சுப்பிரமணியம் சதாசிவம் புத்தூர் பகுதிக்கு சமாதானநீதவாஞக, யாழ்ப்பாண மாவட்ட நீதியரசர் முன்னிலையில், அண்மையில் விசுவாசப்பிரமாணம் செய்துகொண்டார்.

புத்தூர் கிராமசபையின் தலைவராக பல ஆண்டுகள் கடமையாற்றினுர். அக்காலத்திலேயே சிறுப்பிட்டியில் குறைந்தவருமானவர்க்கத்தின் வீட்டமைப்புத்திட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. புத்தூர் கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்கம், கூட்டுறவுச்சங்கம் ஆகியவைகளின் தலைவராக அவை தொடங்கியகாலம் தொட்டு அங்கம்வகித்துவருகிருர். யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

## வன்னியசிங்கம் நினைவுதினவிழா

யாழ்ப்பாணம், வியா.

அமரர் வன்னியசிங்கம் நினைவுவிழா இம்மாதம் 17-ந் திகதி ஆவரங்காலில் நடைபெறவிருக்கிறது.

மந்திரி திரு. எம். திருச்செல்வம், திருவாளர்கள் செ. இராசதுரை, சி.கதிரவேற்பிள்ளை, அ. அமிர்தலிங்கம், எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் இக்கூட்டத்தில் பேசுவார்கள்.

## கல்விப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 75-வது ஆண்டு விழா சம்பந்தமான கல்விப் பொருட்காட்சியை நேற்றுக் காலை வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் திறந்து வைத்தார்.

செவி-கட்புலச் சாதனங்கள் நிலைய நிதிக்காக நடைபெறும் இப்பொருட்காட்சி இன்றும் நாளையும், காலை 9 மணி முதல் 11-30 மணி வரையும் மாலை 2 மணி முதல் 6 மணி வரையும் நடைபெறும்.

பௌதிகம், இரசாயனம், உயிரியல், பொதுவிஞ்ஞானம், புவியியல், சமூகவியல், சித்திரம் சம்பந்தமான காட்சிகள் இக் கல்விப் பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

## விலைகளைக் குறைக்க ஆலோசனை

பம்பலப்பிட்டி, வியாழன்

கட்டுப்படுத்தப்பட்டவிலைகளுக்கு மேலாகவும், கறுப்புச்சந்தையிலும் வியாபாரிகள் பொருட்களை வாங்கக் கூடாதென்று உதவிமந்திரி திரு. பி. சி. இம்புலாஞு 40 வியாபாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் மகாநாடொன்றில் குறிப்பிட்டார்.

பொருட்களின் விலைகளை எவ்வாறு குறைக்கலாம் என்பதற்கான ஆலோசனைகளையும் உதவிமந்திரிக்கு வியாபாரிகள் கூறியிருக்கின்றனர்.

## தேசிய ஒற்றுமை ஏற்பட வழி

கம்பளை, வியாழன்

இலங்கை இந்தியர் பிரச்னை உடனடியாக தீர்க்கப்படாதவரை தேசிய ஒற்றுமை ஏற்படாதென செனட்டர் ஆனந்த தஸநாயக்கா உலாப்பனே அன்சார நிலைய திறப்புவிழாவில் பேசும்போது கூறினுர்.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் இவற்றை அமுல் நடத்துவது தற்போதைய தேசிய அரசாங்கத்தில் தங்கியுள்ளதென்றும் செனட்டர் மேலும் கூறினுர்.

## வருடாந்தக் கூட்டம்

திருக்கோணமலை, வியாழன்

ஐக்கிய தேசியக் கட்சியின் திருக்கோணமலைக் கிளையின் வருடாந்தக் கூட்டம் அக்டோபரில் நடைபெறலாமென கட்சி அமைப்பாளர் திரு. எஸ். ரி. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வருடாந்தக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக போக்குவரத்து மந்திரி திரு. இ. எல். பி. ஹுறுள்ளே கலந்துகொள்வாரென்றும் அவர் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

துணுக்காய், வியாழன்

துணுக்காய்ப்பிரிவில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களின் கருத்தரங்கொன்றைத் துணுக்காய்ப் பிரிவுப் பதில் காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம் நடத்துவதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்துவருகின்றுர். இக்கருத்தரங்கு இம்மாதம் 18-ம் திகதி துணுக்காய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும். யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. பெருமையினுர் கருத்தரங்கைஆரம்பித்துவைப்பார்.

## பாரதிவிழா

கொழும்பு, வியாழன்

அக்குவைனுஸ் தமிழ் மன்றத்தினர் இம்மாதம் 11-ந் திகதி சனிக்கிழமை மாலை பாரதிவிழாவைக் கொண்டாட இருக்கின்றனர். விழாவில் கௌரவ நீதியரசர் பொ. சிறீஸ்கந்தராசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

அத்தருணம் அரசகருமமொழித் திணைக்களப்பதிப்பாசிரியர் திரு. செ. வேலாயுதபிள்ளை "பாரதியின் பாஞ்சாலி சபதம்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். இதையடுத்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## வருடாந்தப் போட்டி

வல்வெட்டித்துறை, வியா

வல்வை றெயின்போஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி மின்னொளியில் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பல நிகழ்ச்சிகள் இடம் பெற்ற போது சிவப்பு இல்லம் 150 1/2 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றது. நீல இல்லம் 142 1/2 புள்ளிகளையும் மஞ்சள் இல்லம் 138 புள்ளிகளையும் முறையே பெற்றன. இப்போட்டிக்கு நீச்சல் வீரர் திரு. வி. எல். சி. ஆனந்தன் தலைமை தாங்கினுர்.

## சீனஎச்சரிக்கையும் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் தனது சகாக்களுடன் நடத்திய அவசர மகாநாடு ஒன்றில் யுதாண்டின் சமரச முயற்சி முடியும் வரை இந்தியாவுக்கு புதிய ஆயுத உதவி எதுவும் அளிப்பதில்லை என முடிவு செய்துள்ளார்.

எனினும் இந்தியாவின் மூன்று கப்பல்களும் ஒரு பிரிட்டிஷ் கப்பலும் இப்பொழுது பிரிட்டனிலிருந்து இந்தியாவை நோக்கி ஆயுதங்கள் கொண்டு வருகின்றன. இந்தியக் கப்பல்களை பிரிட்டன் கட்டுப்படுத்த முடியாது. இந்தியாவுக்ென ஆயுதந் தாங்கிக் கொண்டு ஏடன் வந்தடைந்துள்ள பிரிட்டிஷ் கப்பலை தடுப்பதா, மேலும் கொண்டு செல்ல அனுமதிப்பதா என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

## நாடக அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யுவசக்தி கலாமன்றத்தினரின் தயாரிப்பான 'விதானையார்' நாடகமும், 'புதையல்' என்ற சரித்திர நாடகமும் வருகிற வெள்ளிக்கிழமை ஆரியகுளம் விளையாட்டு மைதானத்தில் அரங்கேற்றப்படவிருக்கின்றது. இந்நாடகங்களின் கதைவசனத்தை திரு. கே. டானியல் எழுதியுள்ளார்,

## "இறுதி மூச்சு" வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச்சங்கத்தின் மூன்ருவது வெளியீடான 'இறுதி மூச்சு' என்னும் வரலாற்று நாடக நூல் இன்று மாலை மாவிட்டபுரத்தில் வெளியிடப்படவிருக்கின்றது.

மாவிட்டபுரம் சின்னப்பு மடத்தில் இன்று மாலை புலவர் ம. பார்வதிநாதசிவம் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் பண்டிதமணி திரு. எஸ். அருளம்பலவனுர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். சங்கீதபூஷணம் பா. முத்துக்குமாரசாமி சர்மா குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும்.

## பாகிஸ்தான் ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மக்களில் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் பின்னர் அறிவிக்கப்பட்டது.

### பஞ்சாபில் பாக். தாக்குதல்

இதற்கிடையே பாகிஸ்தான் விமானங்கள் பஞ்சாபில் பல இடங்களில் குண்டுகள் பொழிந்திருக்கின்றன. ஏராளமான பொதுமக்கள் பலியாஞர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் விமானங்கள் இன்று ஜம்முவையும் தாக்கின. இந்திய விமானத் தரப்பில் சேதமெதுவும் இல்லை.

### பாரா துருப்புகள்

இந்தியப் பகுதிக்குள் (குறிப்பாக பஞ்சாப் பகுதியில்) வந்திறங்கிய பாகிஸ்தானிய பாரசூட் துருப்புகளில் இதுவரை 56 பேர் பிடிபட்டனர். இவர்கள் பல பகுதிகளிலும் நாசவேலையில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. இதேநேரத்தில் பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் இந்திய பாரசூட் துருப்புகள் தரையிறங்கியிருக்கின்றனர் என்றும் இவர்களில் சிலர் பிடிபட்டிருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமண அழைப்பு

### இராசதுரை-தனபாக்கியலக்ஷ்மி

மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்த எம். கணபதிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், இரத்தினபுரி கச்சேரியில் கடமையாற்றுபவருமான திரு. இராசதுரைக்கும், துளாய், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வி. பொன்னுத்துரை தம்பதிகளின் மகளும், திருகோணமலை, சுங்கப்பகுதி, வல்லிபுரம், யாழ்ப்பாணம் கூட்டுறவுக் காரியாலயம், சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் வைரமாளிகை, சந்திரலிங்கம் ஆகியோரின் சகோதரியும், சென்னை 'போர்ட் டிரஸ்ட்' (Port Trust, Madras) சம்பத்தின் மைத்துனியுமாகிய செல்வி தனபாக்கியலக்ஷ்மிக்கும் 12-9-65 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தொண்டமாஞறு செல்வச்சந்நிதி கோவிலில் திருமணம் நடைபெறும். நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

1011 பொ. வல்லிபுரம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாத 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org